<u>DEPOSITION OF WITNESS</u>
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 446/2025

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

Name : சுமதி

Husband's Name : முருகசுந்தரம்

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 04.03.2026.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் வாங்கலில் குடியிருந்து டைலரிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 2,3 வருடங்களுக்கு முன்பாக தேதி மாதம் நினைவில்லை, வேறொரு வேலையாக காவல் நிலையம் சென்றபோது, போலிசார் என்னிடம் வெள்ளைத் தாளில் கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார்

மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனுவிலுள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி குவிமுச பிரிவு 161க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் 1ம் எதிரி பாலாஜி என்பவரிடம் நான் ரூ.50,000/- கடனாக பெற்று அதற்கு ஈடாக எழுதப்படாத காசோலை மற்றும் எழுதப்படாத புரோநோட்டில் கையொப்பம் செய்து கொடுத்ததாகவும், மேற்படி கடனுக்கு வட்டியாக 10 நாட்களுக்கு ஒரு முறை ரூ.5000/- கட்ட வேண்டும் எனவும், இதுவரை ரூ.90,000/- வட்டி மட்டும் கட்டியுள்ளதாகவும், அதற்கு மேல் தன்னால் வட்டி கட்ட இயலவில்லை எனவும், அதனால் 1ம் எதிரி தன்னை தினமும் போனில் மிரட்டி வருவதாகவும், 2ம் எதிரி தினேஷ் என்பவரிடம் ரூ.10,000/- கடனாக பெற்று 10 நாட்களுக்கு ஒரு முறை ரூ.1000/- வட்டி கட்டி வந்ததாகவும், இதுவரை ரூ.30,000/- வட்டி செலுத்தியதாகவும், வாரவாரம் வந்து தன்னிடம் வட்டி கேட்டு தகாத வார்த்தைகளால் திட்டி வருவதாகவும், 3ம் எதிரி சிலம்பரசனிடம் ரூ.5000/- கடனாக பெற்று 10 நாட்களுக்கு ஒரு முறை ரூ.500/- வட்டி செலுத்தியதாகவும், இதுவரை ரூ.22,500/- வட்டி செலுத்தியுள்ளதாகவும், பின்னர் 3ம் எதிரியும், அவரது அடியாள் தண்டபானியும் வீட்டிற்கு வந்து கெட்ட வார்த்தையால் திட்டி தன்னை அசிங்கப்படுத்தியதாகவும், எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன்

சமாதானம் ஆகிவிட்டதால் அவரை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் பொருட்டு அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை ( 1 முதல் 3 எதிரிகள் தரப்பில்)**

நானும், எதிரிகளும் சமாதானமாக சென்றுவிட்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./—எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**